கொடுக்கப்பட்டு வருகிறது. விதைக் கரும்பைக் கொடுப்பதற்கும், பயிர்ப் பாதுகாப்பு ரசாயன முறையில் மட்டுமின்றி, அது தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கரும்பு சாகுபடியின்கீழ் உள்ள பரப்பளவை அதிகமாக்குவதைக் காட்டிலும் ஏக்கர் ஒன்றுக்குக் கிடைக்கும் விளைச்சலை அதிகப் படுத்தும் நோக்கத்துடன் எட்டு கரும்பாலைப் பிரதேசங்களில் மும்முர சாகுபடித் திட்டம் செயலாக்கப்பட்டிருக்கிறது. அவை களுக்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகளையும் அரசு வழங்கி வருகிறது.

Cellular concrete plant at Ennore

* 336 Q.—DR. H. V. HANDE : THIRU N. KITTAPA : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal to put up a Cellular Concrete Plant opposite the Ennore Thermal Station to produce precast bricks and slabs using flyash as the main raw material; and

(*b*) when is the Plant likely to start production?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) எண்ணூர் அனல்மின் நிலையத்திற்கு எதிரில் அமைக்கப்பட்டு வருகிற புழைக்கற்கல்வைத் தொழிற்சாலை முன்னரே வார்க்கப்பட்ட செங்கற்களையும் மணலை மூலப்பொருளாகப் பயன்படுத்தி மணல் நலக்கற்களையும் உற்பத்தி செய்ய அமைக்கப்பட்டுள்ளது. எண்ணூர் அனல் மின்சார நிலையத்தில் உற்பத்தியாகிற சாம்பலைக் கொண்டு உறுதிவாய்ந்த கட்டிடப் பகுதிகளைத் தயாரிப்பது குறித்து தொடர்ந்து சோதனை நடத்திய பிறகும், அது தொடர்பான பொருளாதாரக் கூறுகளை ஆய்வு செய்த பிறகும், தற்போது கட்டிடப் பொருட்கள் தயாரிப்பதில் மணலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இன்னும் சுமார் 4 ஆண்டுகளில் இச் சாம்பலைப் பயன்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று ஆய்வில் உள்ளது.

(இ) மணலைப் பயன்படுத்தி மாதிரி உற்பத்தி 1971 நவம்பர் மூன்றாவது வாரத்தில் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. அதன் பின்னர் 6 வாரத்திற்குள் முறையான உற்பத்தி ஆரம்பிக்கப்படும்.

DR. H. V. HANDE : May I know the investment that the Government are going to make on this—the total amount—whether this is a State Government Project, when is it exactly going to start and the number of persons who are likely to be employed in this Project and whether preference will be given to the persons who belong to that area?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1971 நவம்பர் மூன்றாவது வாரத்தில் இந்தத் தொழிற்சாலை வேலை தொடங்கும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இதுவரையில் வீட்டு வசதி வாரியத் துறை மத்திய அரசு உதவித் தொகையாக 230 லட்சம்

ரூபாயை மூலதனமாகப் போட்டிருக்கிறது. மீண்டும் மறு மதிப்பீட்டின்படி 365 லட்சம் ரூபாய் வரையில் செலவு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. முடிந்த வரையில் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகள் தரப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : புதிதாக அமைக்கப்படக்கூடிய பிளாண்டில் ரேட்டெட் கபாசிடி எவ்வளவு? நவம்பர் மாதத்திற்குப் பின்னால் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழிற்சாலை அமைப்பது முடிவுபெற்ற பிறகுதான் அதனுடைய நிலவரம் தெரியும். தற்போது அந்தப் புள்ளி விவரங்கள் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அதில் உற்பத்தியாகும் செங்கற்கள் எவ்வளவு? ஹவுசிங் போர்டுக்குத் தவிர தனி நபர்கள் பயன்படுத்துவதற்குக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு நான்கு கோடி ரூபாய் வரையில் செங்கற்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தனியாருக்கும் விற்கப்படும் என்று நம்புகிறேன்.

Assistance by Prosperity Brigade to State Transport Services.

* 337 Q. THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Prosperity Brigade has been deployed to assist the State Transport Services in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) ஆம்.

(இ) இவர்கள் காலையிலும், மாலையிலும் சென்னை மாநகரில் பேருந்துகள் நிற்கும் முக்கியமான 50 இடங்களில் பயணிகளை ஒழுங்காக வரிசை முறையில் நிற்கவைத்து நெரிசலின்றிப் பயணிகளைப் பேருந்துகளில் ஏற்றியனுப்பி உதவி வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர்களுக்காக ஆள் ஒன்றுக்குச் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் தரப்படுகிறது. வேறு எந்தச் செலவும் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது சென்னை நகரில் 50 இடங்களில் சீரணிப் படையினரைப் பயன்படுத்திக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதுபோன்ற மற்ற பல பஸ் ஸ்டாப்புகளிலும் இந்த சீரணிப் படையினரைப் பயன்படுத்து